கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635
# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்
NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 116 | 01-11-2025 | சனி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 116 | 01-11-2025 | Saturday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## 1 கோடி அரசு வேலை, விவசாயிகளுக்கு ரூ.9000' பிஹாரில் தே.ஜ. கூட்டணியின் தேர்தல் அறிக்கை!




பாட்னா: நவ.1–

பிஹார் சட்டப்பேரவை தேர்தலுக்கான கூட்டு தேர்தல் அறிக்கையை தேசிய ஜனநாயகக் கூட்டணி நேற்று வெளியிட்டது. ஒரு கோடி இளைஞர்களுக்கு அரசு வேலை, விவசாயிகளுக்கு ரூ.9 ஆயிரம் நிதியுதவி உள்ளிட்ட வாக்குறுதிகள் இந்த 69 பக்க தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ளது.

2025 பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கான கூட்டு தேர்தல் அறிக்கை நேற்று ( அக்டோபர் 31) வெளியிடப்பட்டது. பாட்னாவில் பாஜக தேசியத் தலைவர் ஜே.பி.நட்டா, முதல்வர் நிதிஷ் குமார், எல்ஜேபி தலைவர் சிராக் பாஸ்வான், பிஹார் பாஜக தேர்தல் பொறுப்பாளர் தர்மேந்திர பிரதான் ஆகியோர் முன்னிலையில் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது.

தேசிய ஜனநாயக கூட்டணி தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்கள்:

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியமைத்த பின்னர் 1 கோடிக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு அரசு வேலை வழங்கப்படும். திறன் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அதன் அடிப்படையில் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

வெள்ள மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டு நதி இணைப்புத் திட்டங்கள், கரைகள் மற்றும் கால்வாய்கள் விரைவாக கட்டப்படும். அடுத்த 5 ஆண்டுகளில் வெள்ளம் இல்லாத பிஹார் என்று இலக்கு எட்டப்படும்.

இலவச ரேஷன், 125 யூனிட் இலவச மின்சாரம், ரூ.5 லட்சம் வரை இலவச மருத்துவ சிகிச்சை, ரூ.5 லட்சத்தில் புதிய வீடுகள் மற்றும் ஏழைகளுக்கு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் ஆகியவை உறுதியளிக்கப்படும்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பல்வேறு சாதிகளின் சமூக மற்றும் பொருளாதார நிலையை மதிப்பிடுவதற்கும், அவர்களின் அதிகாரமளிப்புக்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கத்திற்கு பரிந்துரைப்பதற்கும் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்படும். இதன்மூலம் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (ணிஙிசி) பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு ரூ.10 லட்சம் வரை உதவித் தொகை வழங்கப்படும்.

முதல்வரின் மகளிர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம், பெண்களுக்கு ரூ.2 லட்சம் வரை நிதி உதவி வழங்கப்படும். தேசிய ஜனநாயகக் கூட்டணி ஒரு கோடி 'லட்சாதிபதி பெண்களை' உருவாக்கும். 'மிஷன் கோடீஸ்வரர்' திட்டம் மூலம் பெண் தொழில்முனைவோர் கோடீஸ்வரர்களாக மாற்றப்படுவார்கள்.

பாட்னா, தர்பங்கா, பூர்னியா மற்றும் பாகல்பூரில் சர்வதேச விமான நிலையங்கள் அமைக்கப்படும். இந்த நான்கு நகரங்களில் மெட்ரோ திட்டங்கள் அமைக்கப்படுவதோடு, ஏழு விரைவுச் சாலைகளை அமைக்கவும், 3,600 கி.மீ ரயில் பாதைகளை நவீனமயமாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. விமான இணைப்பு மேலும் 10 நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிற்சாலைகள் மற்றும் 10 புதிய தொழில்துறை பூங்காக்கள் கட்டப்படும். கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் குறைந்தது 100 சிறு, குறு தொழில் பூங்காக்கள் மற்றும் 50,000 க்கும் மேற்பட்ட குடிசை தொழில் நிறுவனங்கள் உருவாக்கப்படும்.

உலகத் தரம் வாய்ந்த மருத்துவம் வழங்கப்படும் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும்.

அனைத்து பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கப்படும். கர்புரி தாக்கூர் கிசான் சம்மன் நிதி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ரூ.3,000 வழங்கப்படும். இதன் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஆண்டு உதவித்தொகை ரூ.6,000 லிருந்து ரூ.9,000 ஆக உயர்த்தும்.

மீனவர்களுக்கான உதவி ரூ.4,500 லிருந்து ரூ.9,000 ஆக உயர்த்தப்படும். மாநிலத்தின் விவசாய உள்கட்டமைப்பில் ரூ.1 லட்சம் கோடி முதலீட்டை அரசாங்கம் உறுதி செய்யும்.

தேசிய ஜனநாயக கூட்டணி ஒரு கல்வி நகரத்தை உருவாக்கவும், உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களின் வளாகங்களை பிஹாரில் திறக்கவும் திட்டமிட்டுள்ளது. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு 'கேஜி முதல் பிஜி' வரை இலவச மற்றும் தரமான கல்வி, பள்ளிகளில் மதிய உணவுடன் சத்தான காலை உணவு ஆகியவை வழங்கப்படும்.

பட்டியல் சமூக பிரிவு மாணவர்களுக்கு குடியிருப்புப் பள்ளிகள் திறக்கப்படும். உயர்கல்வி பயிலும் பட்டியல் சமூக மாணவர்களுக்கு ரூ.2,000 மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படும். சீதை பிறந்த இடம் 'சீதாபுரம்' என்று அழைக்கப்படும். அது உலகத் தரம் வாய்ந்த ஆன்மீக நகரமாக மேம்படுத்தப்படும்.

## தமிழ்நாட்டில் ரூ.3250 கோடி முதலீட்டில் வாகன இன்ஜின் உற்பத்தி: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

சென்னை: நவ.1–

தமிழ்நாட்டில் மீண்டும் கார் உற்பத்தியை ஃபோர்டு நிறுவனம் தொடங்குகிறது. தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஃபோர்டு நிறுவனத்தால் ரூ.3250 கோடி முதலீட்டில் 600 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், செங்கல்பட்டு மாவட்டம், மறைமலை நகரில், அடுத்த தலைமுறை வாகன இன்ஜின் (Next-Gen Engine) உற்பத்தி செய்வதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.



தமிழ்நாடு, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாகவும், பல்வேறு துறைகளில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாகவும் விளங்கி வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, 202425 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும். 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்கும். தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம், அமெரிக்காவிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்ட முதலமைச்சர் அவர்கள், ஃபோர்டு நிறுவனத்தின் உயர் அதிகாரிகளைச் சந்தித்து, தமிழ்நாட்டில் மீண்டும் செயல்பாடுகளைத் தொடங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அப்போது ஃபோர்டு நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் உறுதியளித்தபடி, ஃபோர்டு நிறுவனம், ரூ.3250 கோடி முதலீட்டில் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், வாகன இன்ஜின் உற்பத்தித் திட்டத்தை மீண்டும் தொடங்க உள்ளது. அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இ.ஆ.ப., தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், இ.ஆ.ப., வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., ஃபோர்டு நிறுனத்தின் உலகளாவிய இயக்குநர் மார்ட்டின் எவரிட், துணைத் தலைவர் மாத்யூ கோடிலூரஸ்கி, தாய்லாந்து திட்டத்தின் மேலாண்மை இயக்குநர் சைமோநேட்டா வெர்டி, இயக்குநர் (உற்பத்தி) தீரஜ் தீக்சித், இயக்குநர் ஸ்ரீபாத் பட் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## "இந்தியா அமெரிக்கா இடையே 10 ஆண்டுக்கான பாதுகாப்பு ஒப்பந்தம்: ராஜ்நாத் சிங் கையெழுத்து",

"மலேசியா கோலாலம்பூரில் 19 வது ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் உச்சி மாநாடு நாளை (1ந்தேதி) நடக்கிறது. அதற்கு முன்பாக மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் அமெரிக்க பாதுகாப்பு துறை அமைச்சர் பீட் ஹெக்செத் ஆகியோர் கோலாலம்பூரில் சந்தித்து இரு நாடுகளின் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து முக்கிய ஆலோசனை நடத்தினார்கள்.இந்த சந்திப்பின்போது அமெரிக்கா இந்தியா இடையே 10 ஆண்டு பாதுகாப்பு கட்டமைப்பில் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்செத் மற்றும் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோர் கையெழுத்திட்டனர்.இது தொடர்பாக பீட் ஹெக் செத் எக்ஸ் வலைதள பக்கத்தில் வெளியிட்ட பதிவில் கூறி இருப்பதாவது:இந்தியா அமெரிக்கா இரு நாடுகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு தகவல் பகிர்வு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்துதல், பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் தடுப்புக்கான ஒரு மூலக்கல்லாக இந்த கட்டமைப்பு கருதப்படுகிறது.இந்த ஒப்பந்தம் இரு நாடுகளின் படைகளுக்கும் ஒரு முக்கியமான படிக்கல்லாகும். இது பாதுகாப்பு மற்றும் நமது வலுவான கூட்டாண்மைக்கான அமெரிக்காவின் நீண்ட கால உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டு காட்டுகிறது என தெரிவித்து உள்ளார்.இது தொடர்பாக மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறும்போது,\"இந்த கட்டமைப்பில் கையெழுத்திட்டது இந்தியா அமெரிக்கா உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தை குறிக்கிறது. ஹெக்செத் தலைமையின் கீழ் உறவுகள் மேலும் வலுப்பெறும்\" என தெரிவித்தார்.",

## தவெக கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த விவகாரம் சம்பவத்தை நேரில் பார்த்தவர்களிடம் சிபிஐ விசாரணை

கரூர்: நவ.1–

கரூர் வேலுசாமிபுரத்தில் தவெக பிரச்சாரக் கூட்டத்தில் 41 பேர் உயிரிழந்த இடத்தை சிபிஐ அதிகாரிகள் பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டனர்.



கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப். 27ம் தேதி நடந்த தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவ்வழக்கை கரூர் நகர போலீஸார் விசாரித்த நிலையில் உயர்நீதிமன்றம் அக். 3ம் தேதி சிறப்பு புலனாய்வுக்குழு அமைத்து உத்தரவிட்டது.

அக். 5ம் தேதி முதல் சிறப்பு புலனாய்வுக்குழு விசாரணை நடத்தி வந்த நிலையில், உச்ச நீதிமன்றம் அக்.13ம் தேதி இவ்வழக்கை சிபிஐக்கு மாற்றி உத்தரவிட்டது. இதையடுத்து அக். 16ம் தேதி கரூர் வந்த சிஐபியினரிடம் அக். 17ம் தேதி எஸ்ஐடி வழக்கு ஆவணங்களை ஒப்படைத்தது.

இதையடுத்து அக். 18ம் தேதி சிபிஐ, தவெக கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் வி.பி.மதியழகன், பொதுச்செயலாளர் புஸ்ஸி என்.ஆனந்த், மாநில இணை பொதுச்செயலாளர் நிர்மல்குமார் மற்றும் தவெகவினர் பலர் மீது எப்ஐஆர் பதிவு செய்தனர். அக். 19ம் தேதி தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஐஏஎஸ் அதிகாரி பிரவீண்குமார், ஏஎஸ்பி முகேஷ்குமார் உள்ளிட்ட சிபிஐ அதிகாரிகள் தங்கள் ஊர்களுக்கு புறப்பட்டு சென்ற நிலையில் சிபிஐ இன்ஸ்பெக்டர் மனோகரன் உள்ளிட்ட 3 பேர் கரூர் சுற்றுலா மாளிகையில் தொடர்ந்து தங்கி எஸ்ஐடி அளித்த ஆவணங்களை ஆய்வு செய்து வந்தனர்.

தொடர்ந்து கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 2ல் மாஜிஸ்ட்ரேட் சார்லஸ் ஆல்பர்ட்டிடம், சிபிஐ இன்ஸ்பெக்டர் மனோகரன் அக். 22ம் தேதி சிபிஐ எப்ஐஆர் அடங்கிய சீலிடப்பட்ட உறையை ஒப்படைத்தார். குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1ல் மாஜிஸ்ட்ரேட் எஸ்.பி.பரத்குமார் விடுப்பில் இருந்ததால், என்பதால் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 2ல் ஒப்படைக்கப்பட்டது.

இதையடுத்து கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1ல் அக். 25ம் தேதி தவெக சிபிஐ எப்ஐஆர் நகலை கேட்டு விண்ணப்பித்த நிலையில் அவர்களுக்கு நகல் வழங்கப்பட்டது. இந்நிலையில் சொந்த ஊர்களுக்கு சென்றிருந்த சிபிஐ அதிகாரிகள் 2 கார்களில் கரூர் சுற்றுலா மாளிகைக்கு திரும்பினர். கரூர் நகர இன்ஸ்பெக்டர் மணிவண்ணன் ஆவணங்களுடன் கரூர் சுற்றுலா மாளிகையில் உள்ள சிபிஐ அதிகாரிகள் முன் ஆஜரரானார்.

அவரிடம் சுமார் 1 மணி நேரத்திற்கு மேலாக சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தினர். 41 பேர் உயிரிழந்த வேலுசாமிபுரம் கரூர் நகர காவல் எல்லைக்குட்பட்ட பகுதி என்பதால் கரூர் நகர இன்ஸ்பெக்டர் மணிவண்ணனிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று (அக். 31ம் தேதி) காலை சுமார் 10.30 மணிக்கு கரூர் சுற்றுலா மாளிகையில் இருந்து புறப்பட்ட சிபிஐ அதிகாரிகள், சம்பவம் நடந்த கரூர் வேலுசாமிபுரத்தை பார்வையிட்டனர். எஸ்.பி. பிரவீண்குமார், ஏஎஸ்பி முகேஷ்குமார் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்டவர்கள் உடனிருந்தனர். கரூர் டிஎஸ்பி செல்வராஜ், இன்ஸ்பெக்டர் மணிவண்ணன் ஆகியோரிடம் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டனர்.

மேலும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்களிடம் விசாரணை நடைபெற்றது. சிபிஐ விசாரணை காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு, தடுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விசாரணை நடத்திய 4 பேர் கோட் அணிந்திருந்தனர். அதன் பின்பகுதியில் சிபிஐ என ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. விசாரணையின்போது ஃபோட்டோ கேமரா, வீடியோ கேமரா, டிரைபேடுகள், சிடி ஸ்கேனர் கருவி ஆகியவை பயன்படுத்தப்பட்டன. முன்னதாக சம்பவம் நடந்த இடத்தில் இருந்த போட்டோ, வீடியோகிராபர்கள், வியாபாரிகள், பொதுமக்கள் ஆகியோரிடம் கரூர் சுற்றுலா மாளிகையில் சிபிஐயினர் விசாரணை மேற்கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், பாகமுகவர்கள் BLA2, பூத் டிஜிட்டல் ஏஜெண்ட BDA,பூத் கமிட்டி உறுப்பினர்கள் ஙிலிசி ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு SIR(சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு)குறித்து மாநிலங்களவை உறுப்பினர் சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர்,எஸ்.ஆர் சிவலிங்கம் தலைமையில் ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள்,தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,நகர, ஒன்றிய,பேரூர் மற்றும் கிளை கழக செயலாளர்கள்,தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள்,பாகமுகவர்கள்(BLA2),பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA),மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் BLC,மற்றும் கழக முன்னோடிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# திருச்சி மாவட்டம் மணப்பாறை காந்தி சிலை அருகே முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி நினைவு தினம் அனுசரிப்பு.



மணப்பாறை , நல.1–

திருச்சி மாவட்டம் மணப்பாறை மாரியம்மன் கோவில் அருகே உள்ள காந்தி சிலையில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மணப்பாறை நகரம் சார்பில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

விழாவிற்கு மணப்பாறை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி நகர தலைவர் நா முருகேசன், சிறப்பு அழைப்பாளராக திருச்சி தெற்கு மாவட்ட தலைவர் பி கோவிந்த ராஜன், மணப்பாறை வட்டாரத்தில் உள்ள அனைத்து தலைவர்கள் முன்னிலையில் இந்திரா காந்தி திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இதில்வையம்பட்டி வட்டாரத் தலைவர் செல்வம் ,ராதாகிருஷ்ணன் , மணப்பாறை வட்டார தெற்கு தலைவர் சத்தியசீலன்,வடக்கு வட்டார தலைவர் சிவா சண்முகம் மருங்காபுரி வட்டாரத் தலைவர் குழந்தை தினேஷ் பாபு,மாவட்ட நிர்வாகிகள் கோபாலகிருஷ்ணன் மாவட்டத் துணைத் தலைவர் கோபாலக வீ.குமார், டைலர் பாலன் ,போஸ்கோ , மாவட்டத் துணைத் தலைவர் மிலிட்டரி நா.முருகன்,மாவட்ட சிறுபான்மை பிரிவு தலைவர்நசீம் (எ) அப்துல்லா ,வீரபாண்டியன் , முத்தழகன் , பாண்டி முருகன் , மாவட்ட மகளிர் அணி தலைவி சரோஜா உள்ளிட்ட மாவட்ட , மற்றும் வட்டார கிளை நகர நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# கோட்டை தமிழ்ச் சங்கம் சார்பில் தாய்மொழியாம் தமிழ் மொழி: உரையரங்கம்





வந்தவாசி, நவ 01:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த இரும்பேடு அரசினர் மேல்நிலைப் பள்ளியில் வந்தை வட்ட கோட்டை தமிழ்ச்சங்கம் சார்பில் “தாய் மொழியாம் தமிழ் மொழி” என்ற தலைப்பில் சிறப்பு உரையரங்கம் நடைபெற்றது. தமிழ் இலக்கிய மன்ற விழாவில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு பள்ளி பொறுப்பு தலைமை ஆசிரியர் முனுசாமி தலைமை தாங்கினார். கோட்டை தமிழ்ச்சங்க தலைவர் பீ.ரகமத் துல்லா, துணை தலைவர் பா. சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழாசிரியர் செல்வமணி வரவேற்றார். சிறப்பு அழைப்பாள ராக, ஓய்வு பெற்ற மாவட்ட கல்வி அலுவலர் மா.மங்கையர்க்கரசி பங்கேற்று, தாய் மொழியாம் தமிழ் மொழி என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். மேலும் இலக்கியங்களில் தமிழின் பெருமைகளை பற்றி வலியுறுத்தினார். அனைவரும் தமிழ் மொழியிலேயே குழந்தைகளுக்கு பெயர் வைக்க வேண்டும் என்று வலியுறுத்தி பேசினார். இந்த நிகழ்வில் தமிழ்ச் சங்க செயலாளர் இரா. பாஸ்கரன்,பொருளாளர் சீ.கேசவராஜ், ஆசிரியர் சம்பத் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் பள்ளி உதவி தலைமை ஆசிரியர் ஆ.சீனிவாசன் நன்றி கூறினார்.

# தஞ்சையில் கோலாகலம்; மாமன்னன் ராஜராஜ சோழனின் 1040வது சதய விழா துவக்கம்:

## 400 கலைஞர்கள் பரதமாடி புஷ்பாஞ்சலி

தஞ்சை: நவ.1–

தஞ்சையில் உலக பிரசித்தி பெற்ற பெரியகோயில் உள்ளது. இது இன்றும் கட்டிட கலைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சியே இல்லாத அந்த காலத்தில் 1,000 ஆண்டுகளுக்கு முன் மாமன்னன் ராஜராஜ சோழன், பெரிய கோயிலை கட்டினார். பெரிய கோயிலுக்கு தினம்தோறும் தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலம், வெளிநாடுகளில் இருந்து ஏராளமான பக்தர்கள், சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இந்நிலையில் தஞ்சை பெரிய கோயிலை கட்டிய ராஜராஜ சோழன் ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தன்று பிறந்ததால் ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதத்தில் வரும் சதய நட்சத்திரத்தன்று சதய விழா அரசு சார்பில் விமரிசையாக 2 நாட்கள் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டு 1040வது சதய விழா நேற்று (31ம் தேதி) துவங்கியது. முதல் நாளான நேற்று காலை 8.15 மணியளவில் தஞ்சை அரண்மனை வளாகத்தில் இருந்து நாட்டுப்புற கலைஞர்கள் பங்குபெற்ற மாபெரும் சதய விழா ஊர்வலம் நடந்தது. பின்னர் கோயில் வளாகத்தில் 400 கலைஞர்கள் பங்கேற்ற பரதநாட்டிய புஷ்பாஞ்சலி நடந்தது. இதைதொடர்ந்து மங்கள இசையுடன் விழா துவங்கியது.

இரண்டாம் நாளான இன்று காலை 6.30 மணிக்கு மங்கள இசை, 7 மணிக்கு கோயில் பணியாளர்களுக்கு புத்தாடை வழங்குதல் நிகழ்ச்சி நடக்கிறது. காலை 7.20 மணிக்கு மாமன்னர் ராஜராஜன் உருவச்சிலைக்கு மாலை அணிவித்தல், காலை 8 மணிக்கு திருமுறை வீதியுலா நிகழ்ச்சி நடக்கிறது. தொடர்ந்து தருமபுர ஆதீனம் 27வது குருமகா சன்னிதானம் □ல□ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பிரமாச்சாரியார் சுவாமி தலைமையில் பெருவுடையார், பெரியநாயகி அம்மனுக்கு மதியம் 1 மணி வைர பேரபிஷேகம் நடக்கிறது.

மாலை 6 மணிக்கு 4 ராஜவீதிகளில் 50க்கும் மேற்பட்ட கலைஞர்களின் இன்னிசையுடன், மயிலாட்டம், ஒயிலாட்டம் முதலிய கிராமிய கலைநிகழ்ச்சிகளுடன் பெருவுடையார், பெரியநாயகி உருவ செப்பு திருமேனிகள் வெள்ளி ரிஷப வாகனத்தில் வீதியுலா நடக்கிறது. இரவு 7.05 மணிக்கு விருது வழங்கும் விழா நடக்கிறது. சதய விழாவையொட்டி தஞ்சை மாவட்டத்துக்கு இன்று உள்ளூர் விடுமுறை விடப்பட்டுள்ளது. விழாவையொட்டி தஞ்சை பெரிய கோயில் முழுவதும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதனால் தஞ்சை நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது.

# கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்துக்காக 10 லட்சம் மடிக்கணினிகள் கொள்முதல்: தமிழ்நாடு அரசு தகவல்

சென்னை: நவ1–

கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்துக்காக 10 லட்சம் மடிக்கணினிகள் கொள்முதல் செய்துள்ளதாக தமிழ்நாடு அரசு தகவல் தெரிவித்துளளது. முதற்கட்டமாக 10 லட்சம் மடிக்கணினிகளை கொள்முதல் செய்ய நிறுவனங்களுக்கு பணி ஆணை வழங்கியது எல்காட். மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்க ஹெச்.பி., டெல், ஏசர் ஆகிய 3 நிறுவனங்களுக்கு பணி ஆணை வழங்கியது எல்காட். மடிக்கணினி மாடல் மற்றும் தொழில்நுட்பத்தை முதலமைச்சர் ஸ்டாலின் ஆய்வு செய்து இறுதி செய்தார். வரும் மார்ச் மாதத்துக்குள் 10 லட்சம் மடிக்கணினிகளை கொள்முதல் செய்து மாணவர்களுக்கு விநியோகம் செய்ய திட்டம்.

# சேலத்தை பலம் சோதிக்கும் களமாக மாற்றிய ராமதாஸ் : அன்புமணி.



சேலம். நவ.1–

பாமகவுக்கு செல்வாக்கு மிக்க மாவட்டங்களில் சேலம் பிரதானமாக உள்ளது. இங்கு, மேட்டூர் பாமக எம்எல்ஏ வாக சதாசிவமும், சேலம் மேற்கு பாமக எம்எல்ஏ வாக அருளும் இருந்து வருகின்றனர்.

இதில், ராமதாஸுக்கு ஆதரவாக அருளும், அன்புமணிக்கு ஆதரவாக சதாசிவமும் கொடிதூக்கி நிற்கிறார்கள். இந்த நிலையில், சேலத்தில் தங்களது இருப்பைத் தக்கவைக்க அண்மையில் அங்கே, ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட பாமக பொதுக்குழு கூட்டத்தை நடத்தினார் ராமதாஸ்.

அந்தக் கூட்டத்தில் அவர் பேசுகையில், ‘பாமக இளைஞரணிக்கு தளபதியாக தமிழ்குமரன் நியமிக்கப்பட்டுள்ளார். அனைத்து இளைஞர்களும் அவருக்கு துணை நிற்க வேண்டும். பாமக இளைஞரணி அவரை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பாமகவுக்கு சேவை செய்யவே எனது பெரிய மகளை செயல் தலைவராக தந்துள்ளேன்’ என்று சொன்னதுடன், ‘பாமக சார்பில் 10.5 சதவீத உள் இட ஒதுக்கீடு போராட்டம் டிசம்பர் மாதம் நடைபெறும்‘ என போராட்ட அறிவிப்பையும் வெளியிட்டார்.

ராமதாஸ் இப்படிக் கூட்டம் போட்டு பேசிய அடி மறைவதற்குள் அன்புமணியும் கடந்த 28ம் தேதி தொடங்கி தனது நான்கு நாள் சுற்றுப்பயணத்தை சேலம் மாவட்டத்தில் தொகுதி வாரியாக மேற்கொண்டு வருகிறார். கடந்த 29ம் தேதி எடப்பாடி தொகுதிக்கு உட்பட்ட ஆவணியூர் திருமலை நகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய அன்புமணி,‘10.5 சதவீத உள் இடஒதுக்கீடு கேட்டு டிசம்பர் 17ம் தேதி எனது தலைமையில் சிறை நிரப்பும் போராட்டம் நடைபெறும்‘ என தந்தைக்குப் போட்டியாக அறிவித்தார்.

தந்தையும் தனயனும் சேலம் மாவட்டத்தை தங்களின் பலத்தை சோதிக்கும் களமாக மாற்றி வருவதால் இரண்டு தரப்பிலும் ஆதரவு திரட்டும் பணிகள் மும்முரமாகி வருகின்றன.

# திருவள்ளூரில் டி.என்.பி.எஸ்.சி, டிஎன்யுஎஸ்ஆர்பி மற்றும் டி.ஆர்.பி போன்ற பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள்

## மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் நவ 01

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையால் 38 மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாக டி.என்.பி. எஸ்.சி, டிஎன்யுஎஸ் ஆர்பி மற்றும் டி.ஆர்.பி போன்ற தேர்வு முகமைகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி வகுப்புகளின் மூலம், பயிற்சி பெற்ற மாணவ,மாணவியர்கள் போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று பல்வேறு அரசு வேலைவாய்ப் பினைப் பெற்றுள்ளனர்.

போட்டித் தேர்வு மாணவர்களை தொடர்ச்சியாக தயார்படுத்தும் விதமாக ஒரு குறிப்பிட்ட போட்டி தேர்விற்காக மட்டுமே மாணவர்களை தயார் படுத்தாமல், மத்திய, மாநில அரசு,பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் முப்படைகளின் போட்டித் தேர்வுகளுக்கான ஆட்சேர்ப்பு முகமைகளால் வெளியிடப்படும் அனைத்து போட்டித் தேர்வுகளுக்கு மாணவர்களை தொடர்ச்சியாக தயார் படுத்தும் வகையில் ஒருங்கிணைந்த கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் 05.11.2025 அன்று காலை 10.30 மணிக்கு திருவள்ளூர் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் துவக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி வகுப்புகள் சிறந்த பயிற்றுநர்களைக் கொண்டு நடத்தப்படு வதுடன் இலவச மாதிரி தேர்வுகளும் மாநில அளவிலான முழு மாதிரி தேர்வுகளும் நடத்தப்படவுள்ளது. மேலும் விவரங்களுக்கு 8489866698, 9626456509 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம்.இந்த இலவச பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விருப்பமுள்ள திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் இரு பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம், ஆதார் அட்டை நகல் விண்ணப்பத்துடன் இணைத்து திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கு நேரில் வருகை புரிந்து பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயனடையுமாறு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப் தெரிவித்துள்ளார்.

# விடுப்பு கேட்ட ஓட்டுநர், பணம் கேட்ட செயலாளர். சேலத்தில் போக்குவரத்துறையில் நடப்பது என்ன?



சேலம். நவ. 1–

தமிழகத்தில் எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும்.அந்த கட்சியில் உள்ள போக்குவரத்து தொழிலாளர் சங்கத்திலுள்ளவர்களே அதிகபடியான ஆதிக்கம் செலுத்துவதும், எதிர்கட்சியில் உள்ள தொழிலாளர்களுக்கு பணிசுமை கொடுப்பதும் எழுதப்படாத சட்டமாக உள்ளது.

மேலும், இவர்கள் கொடுக்கும் பணி சுமை எந்த கட்சியும் சாராமல் உள்ள தொழிளார்களின் தலையிலேயே விடிகிறது. இதனை எதிர்த்து யாராவது பேசினால் அவர்களுக்கு மேமோதான். அந்த வகையில் சேலம் கோட்டம் தர்மபுரியில் நடந்த ஒரு வில்லங்க விவகாரம் மிகப்பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சௌந்தர ராஜன் என்பவர் 15 ஆண்டுகளுக்கு மேலாக அரசு போக்குவரத்துறையில் பணிபுரிந்து வருகிறார். இவர் தற்போது சேலம் கோட்டம், தருமபுரி மண்டலம், பொம்மிடி போக்குவரத்து பணிமனையில் டிரைவராக பணிபுரிந்து வருகிறார். கடந்த சில நாட்களுக்கு முன்பு.. சௌந்தர ராஜன் பணிமுடிந்து டூவீலரில் வீட்டிற்கு செல்லும் போது விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் சௌந்தர ராஜனுக்கு பணியில் இருக்கும்போது அடிக்கடி மயக்கம் ஏற்பட்டுள்ளது. இதனை உணர்ந்த அவர்.. பணி நேரத்தில் ஏதேனும் அசம்பாவிதம் ஆகிவிடக்கூடாது என்பதற்காக.. விடுப்பு எடுத்து மருத்துவரிடம் விசாரிக்கலாம் என நினைத்துள்ளார். அதற்காக விடுப்பு எடுக்க பணிமனை செயலாளர் ஜி. மாது என்பவரிடம் கடிதம் கொடுத்தபோது.. அவர் லஞ்சம் கேட்டு மிரட்டியுள்ளார். தற்போது, இதுதொடர்பான ஆடியோ வெளியாகி.. பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

இந்த போக்குவரத் துறையில்.. மண்டலம், அதற்கு கீழ் கோட்டம் அதற்கு கீழ் கிளை மேலாளர் இந்த கிளை மேலாளர் கீழ் பரிசோதனையாளர்கள் என இவர்கள் தான் பணியாற்றுகிறார்கள். ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கான விடுப்பு, பேருந்து மாற்றம் போன்றவற்றை இவர்கள் தான் கொடுக்கவேண்டும். ஆனால் இவர்கள் தங்களுடைய பணியை சரியாக செய்யாததால் பணிமனை செயலாளர்கள் இந்த அதிகாரத்தை கையில் எடுத்துக்கொள்கிறார்கள். எந்த கட்சி ஆட்சிக்கு வருகிறதோ அந்த கட்சி தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்.. முறையாக பணிக்கே செல்லாமல், அவர்களின் பணிகளை மற்றவர்களிடம் கொடுக்கின்றனர். இது எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் எழுதப்படாத சட்டமாக உள்ளது. இதற்கிடையில், எந்த கட்சியும் சாராமல் பணிபுரிகின்ற மற்ற தொழிலாளர்களுக்கு மட்டும், மீண்டும் பணிகளை கொடுத்து இரண்டு மூன்று சிப்பட் பார்க்கவைப்பது. மீறி எதிர்த்து கேட்டால் அவர்களுக்கு பொய்யான புகார்களை கூறி மேமோ கொடுப்பது என்பது வழக்கமாகிவிட்டது.

இதனை கேட்கவேண்டிய அதிகாரிகள் கேட்காமல் இருப்பதாலே இது போன்ற சிக்கல் நாளுக்கு நாள் தொடர்கிறது. அதைமீறி சில அதிகாரிகள் இதை கேள்விக் கேட்டால்.. கேட்கும் அதிகாரிகள் டிரான்ஸ்பர் செய்யப்படுகிறார்கள். இதே போல், அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்ட பணிமனை செயலாளர் மாது.. ஊழியர்களை மிரட்டி பண வசூல் செய்து வந்துள்ளார். இந்த சூழலில், டிரைவர் சௌந்தர் ராஜனிடம் கேட்டு சிக்கிய விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து, இவர்களால் மற்றொரு டிரைவரின் மனைவியும் இதனை அம்பலப்படுத்தியுள்ளார். இதனிடையே, சேலம் கோட்டம் மட்டுமின்றி தமிழக முழுவதும் இதே கெதிதான் தொழிலாளிகள் குற்றம சாட்டுகின்றனர். மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தும் இந்த விவகாரத்தில் திமுக அரசு செவிசாய்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

# சம்பா நெற்பயிருக்கு காப்பீடு செய்ய நவம்பர் 15 கடைசி நாள்

## திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்




திருவள்ளூர் நவ 01 :

வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ள காரணத்தால் திருவள்ளூர் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் நெற்பயிர் சாகுபடி செய்த விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் திரு.மு.பிரதாப் அவர்கள் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் கூறியிருப்பதாவது:

திருவள்ளூர் மாவட்டத்தில் 14 வட்டாரங்களில் அறிவிக்கை செய்யப்பட்ட 730 வருவாய் கிராமங்களிலும் நடப்பு சம்பா பருவத்தில் விவசாயிகள் நெற்பயிருக்கு காப்பீடு செய்து, மகசூல் இழப்பிற்கு ஏற்றவாறு இழப்பீட்டு தொகை பெற முடியும். இதுவரை வடகிழக்கு பருவமழை 289.85 மி.மீ திருவள்ளூர் மாவட்டத்தில் பதிவாகி உள்ளது. மேலும் நவம்பர் மாதத்தில் பருவ மழைபொழிவு அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. இதனால் விவசாயிகள் சாகுபடி செய்துள்ள நெல் பயிர்களில் ஏற்படும் மகசூல் இழப்பினை ஈடுசெய்யும் பொருட்டு, நடப்பாண்டில் தேர்வு செய்யப்பட்டுள்ள அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆஃப் இந்தியா லிட் என்ற காப்பீட்டு நிறுவனத்தில் இணைந்து பயிர் காப்பீடு செய்ய நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாள் 15.11.2025க்குள் பயிர் காப்பீடு செய்ய அறிவுறுத்தப் படுகிறது.

எனவே, சம்பா பருவத்தில் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலோ, பொது சேவை மையங்களிலோ (இசேவை மையங்கள்) நேரிடையாக, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் காப்பீடு கட்டணமாக ஒரு ஏக்கருக்கு ரூ.545/ மட்டும் செலுத்தி காப்பீடு செய்துகொள்ளலாம்.

விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் போது முன் மொழிவு விண்ணப்பம், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் நடப்பு பசலிக்கான அடங்கல், கணினி சிட்டா வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து காப்பீட்டு கட்டணத் தொகையை செலுத்திய பின் அதற்கான இரசீதையும் பொது சேவை மையங்களில் (இசேவை மையங்கள்)/ தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள்,தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவு செய்த விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளதா என விவசாயிகள் உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு தங்களது பகுதியில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# CBSE பொதுத்தேர்வுக்கான தேதிகள் அறிவிப்பு!

CBSE 10, 12ம் வகுப்பு பொதுத்தேர்வுக்கான அட்டவணை வெளியிடப்பட்டது. காலை 10.30 மணி முதல் 1.30 வரை தேர்வு நடைபெற உள்ளது. வரும் பிப்ரவரி 17ம் தேதி தொடங்கும் தேர்வுகள், 10ம் வகுப்புக்கு வரும் மார்ச் 10ம் தேதியும், 12ம் வகுப்புக்கு ஏப்ரல் 9ம் தேதியும் தேர்வுகள் முடிவடைய உள்ளன. தேர்வு அட்டவணையை http://cbse.gov.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம்.

# மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று,, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம். கிராம குடிநீர் திட்டம். கோட்டத்தின் சார்பில் வாகனத்தில், மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்து வெளியிடப்பட்ட குறும்படத்தை, பொதுமக்கள் மற்றும் அலுவலர்கள் ஆர்வத்துடன் பார்த்தனர்.

# மணப்பாறை வட்டாட்சியர் அலுவலகத்தில், பாதை ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி ஒரு குடும்பத்தினர் மண்ணெண்ணெய் கேனுடன் வந்ததால் பரபரப்பு.



திருச்சி. நவ.1–

திருச்சி மாவட்டம் மணப்பாறையை அடுத்துள்ளது உசிலம்பட்டி ஊராட்சி பகுதி உசிலம்பட்டியை சேர்ந்த சீனிவாசன் இவரது மனைவி விஜயலட்சுமி இவர்களுக்கு அதே பகுதியில் 4.3/4 செண்ட் வீட்டு நிலம் உள்ளது இவரின் வீட்டின் அருகாமையில் உள்ள நிலத்தினர் விஜயலட்சுமி வீட்டிற்கு செல்ல முடியாத அளவிற்கு அனைத்து பாதையையும் அடைத்து வைத்ததாக கூறப்படுகிறது,

இந்நிலையில் கடந்த எட்டு மாதங்களாக ஆக்கிரமிப்பை மீட்டு தரக்கோரி தொடர்ந்து விஜயலட்சுமி மணப்பாறை வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் பலமுறை மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்காமல் இருந்ததாக கூறி தனது குடும்பத்தினருடன் நேற்று காலை மணப்பாறை வட்டாட்சியர் அலுவலகம் வந்த விஜயலட்சுமி மற்றும் அவரது குடும்பத்தினர் தான் கையில் மறைத்து வைத்திருந்த மண்ணெண்ணெய் கேனை எடுத்து ஊற்ற முயற்சித்தனர். அப்போது அங்கே இருந்த அதிகாரிகள் உடனடியாக அவரிடம் இருந்து மண்ணெண்ணெய் கேனை மீட்டு அவரின் கோரிக்கை குறித்து அதிகாரிகள் விசாரித்தனர்.

பின்னர் இது பற்றி தகவல் அறிந்த மணப்பாறை காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து அதிகாரிகள் மற்றும் காவல் துறையினர் பேச்சு வார்த்தை நடத்தினர்

பேச்சுவார்த்தையில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக கூறியதை தொடர்ந்து குடும்பத்தினருடன் கலைந்து சென்றனர்.

ஒரு குடும்பத்தினர் மண்ணெண்ணெய் கேடுடன் வந்த சம்பவம் வட்டாட்சியர் அலுவலகத்தில்பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது.

# திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் சிறப்புக் குழு ஆய்வுக் கூட்டம்




திருச்சி. நவ.1–

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் சிறப்புக் குழு ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே.சரவணன்;,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் சிறப்புக் குழு உறுப்பினர்கள், திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ். இனிகோ இருதயராஜ் அவர்கள், தமிழ்நாடு வக்பு வாரிய உறுப்பினர் மருத்துவர் அ.சுபேர்கான் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகையில் 27,22,290இல் 4,38,322 சிறுபான்மையினர் நல மக்கள் அதாவது 16.10மூ சிறுபான்மையினர் மக்கள் வசித்து வருகின்றனர். சிறுபான்மையினர் நலம் தொடர்பாக பல்வேறு நலத்திட்ட உதவிகள் 2021 முதல் 2025 வரை சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களில் குறிப்பாக முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் 1 ரூ 2 சார்பில் 1387 பயனாளிகளுக்கு ரூ.121.02 இலட்சம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் மூலம் 516 பயனாளிகளுக்கு ரூ.64.04 இலட்சத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. உலமா மற்றும் பணியாளர் நலவாரியத்தின் கீழ் 415 உறுப்பினர்களுக்கு ரூ.21.47 இலட்சத்தில் விலையில்லா மிதிவண்டிகளும் மற்றும் 46 உறுப்பினர்களுக்கு ரூ.18.91 இலட்சத்திற்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது.

இதைத்தவிர 141 சிறுபான்மையின மகளிருக்கு விலையில்லா தையல் இயந்திரம் ரூ.8.9 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கிறித்துவ தேவாலயங்களை புனரமைத்தல் திட்டத்தின் கீழ் 5 தேவாயலங்களுக்கு ரூ.84.27 இலட்சத்திற்கு பழுது பார்ப்பு பணிகள் மேற்கொள்ள முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு 2 தேவாலயங்களுக்கு ரூ.30.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தொன்மையான கிறித்துவ தேவாலயங்களை பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் திட்டத்தின் கீழ் 1890 ஆம் ஆண்டு கட்டப்பட்ட புனித லூர்து அன்னை தேவாலயம் கண்டறியப்பட்டு, இத்தேவாயலத் திற்கு பழுதுபார்த்தல் மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.120.00 இலட்சம் செலவில் 13.03.2025 மற்றும் 08.10.2025 அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் கல்லறைத்தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களுக்கு சுற்றுச்சுவர் மற்றும் பாதை அமைக்கும் திட்டத்தின் கீழ் தாத்தையங்கார் பேட்டை, முசிறி, துறையு+ர் மற்றும் தொட்டியம் ஆகிய ஒன்றியங்களில் உள்ள 5 இடங்களுக்கு சுற்றுச்சுவர் மற்றும் பாதை அமைக்க ரூ.85.48 இலட்சம் மதிப்பீட்டில் அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்ட தலைநகர எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் அரசு நிலங்களில் 30 இடங்களில் கல்லறைத்தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் (டாம்கோ) மூலம் வழங்கப்படும் கடன் திட்டத்தின் கீழ் 2021 முதல் 2025 வரை 1967 பயனாளிகளுக்கு ரூ.958.49 இலட்சம் கடனுதவி வழங்கப் பட்டுள்ளது.இதைத்தவிர தமிழ் நாடு அரசு சிறுபான்மையினருக்காக வழங்கும் அனைத்து நலத்திட்ட உதவிகளும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சிறப்பான முறையில் செயல்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இன்று நடைபெற்ற கூட்டத்தில் கிறித்துவ தேவாலயங்களை பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ள அரசின் நிதி உதவியாக ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் 1 பயனாளிக்கு காசோலையும், 7 பயனாளிக்கு ரூபாய் 39,200 மதிப்பீட்டில் மின் மோட்டாருடன் கூடிய விலையில்லா தையல் இயந்திரமும், 188 பயனாளிக்கு ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மூலம் நலத்திட்ட உதவிகளும், 145 பயனாளிக்கு ரூபாய் 21.23 இலட்சம் மதிப்பீட்டில் கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் மூலம் நலத்திட்ட உதவிகளும் என மொத்தம்; 341 பயனாளிகளுக்கு ரூபாய் 56.62 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. ராஜலட்சுமி, மாவட்ட வருவாய் அலுவலர் (நிலமெடுப்பு) திரு.ஆர். பாலாஜி, அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ரூ.18,238 கோடிக்கு திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதி: இந்திய அளவில் தொடர்ந்து முதலிடம்

திருப்பூர்: நவ.1–

கடந்த நிதியாண்டான 2024 25ம் ஆண்டில் இந்தியாவின் பின்னலாடை ஏற்றுமதி ரூ.65 ஆயிரத்து 178 கோடிக்கு நடந்தது. இதில் திருப்பூரில் இருந்து ரூ.39 ஆயிரத்து 618 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது. இது இந்தியா அளவில் திருப்பூரின் பங்களிப்பு 61 சதவீதம் ஆகும்.

2023 24ம் ஆண்டில் இந்தியாவின் ஏற்றுமதி ரூ.55 ஆயிரத்து 798 கோடிக்கு நடந்தது. இதில் திருப்பூரின் பங்களிப்பு ரூ.33 ஆயிரத்து 45 கோடியாகும். நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை என கடந்த 5 மாதங்களில் இந்தியாவின் ஏற்றுமதி ரூ.29 ஆயிரத்து 899 கோடியாகும்.இதில் திருப்பூரின் பங்களிப்பு ரூ.18 ஆயிரத்து 238 கோடியாகும்.

ஏப்ரல் மாதம் ரூ.3 ஆயிரத்து 260 கோடியும், மே மாதம் ரூ.3 ஆயிரத்து 924 கோடியும், ஜூன் மாதம் ரூ.3 ஆயிரத்து 622 கோடியும், ஜூலை மாதம் ரூ.3 ஆயிரத்து 834 கோடியும், ஆகஸ்ட் மாதம் ரூ.3 ஆயிரத்து 598 கோடிக்கும் ஏற்றுமதி நடந்துள்ளது. இது குறித்து திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதியாளர்கள் கூறுகையில், “நாட்டின் மொத்த பின்னலாடை ஏற்றுமதியில் திருப்பூர் 61 சதவீத பங்களிப்பை வழங்கி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது” என்றனர்.

# மணப்பாறையில் 7 மாத கர்ப்பிணியை கடித்த தெருநாய்: சாலையில் சென்று கொண்டிருந்த போது கடித்து குதறியது

திருச்சிராப்பள்ளி: நவ.1–

மணப்பாறையில் 7 மாத கர்ப்பிணியை தெருநாய் கடித்து குதறிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. திருச்சி மாவட்டம் மணப்பாறை பகுதியில் கடந்த சில மாதங்களாக தெருநாய்கள் தொல்லை மிகவும் அதிகமாக உள்ளது. அனைத்து வார்டுகளிலும் தெருநாய்கள் சாலையில் சுற்றி திரிவதாகவும். பள்ளி செல்லும் மாணவர்கள் முதல் இருசக்கர வாகனத்தில் செல்வோர்கள் வரை நாய்கள் துரத்தியதால் கீழே தடுமாறி விழுந்து அடிக்கடி காயம் ஏற்படுகிறது.

இந்த நிலையில், இன்று காலை மணப்பாறை லட்சுமிபுரம் பகுதியில் 7 மாத கர்ப்பிணி பெண் சங்கரி என்பவரை நடந்து செல்லும் போது தெருநாய்கள் துரத்தி கடித்துள்ளது. கர்ப்பிணி பெண் அங்க இருந்து ஓடமுடியாமல் தவிர்த்த நிலையில், அந்த பெண் காலில் நாய் கடித்துள்ளது. தடுக்க முடியாமல் ரொம்ப சிரமம்பட்டுள்ளார். அப்பகுதியில் கூச்சலிடவே அக்கம்பக்கத்தினர் ஓடிவந்து அந்த பெண்ணை காப்பாற்றி நாய்கள் துரத்தி உள்ளனர்.

பின்னர் அந்த பெண் தனியார் ஆட்டோவில் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு சங்கரி சிகிச்சை பெற்று வருகின்றார். இதனிடையே நகராட்சி பகுதியில் உள்ள நாய்களை கட்டுப்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர். கடந்த சில மாதங்கள் பொதுமக்கள் கோரிக்கை விடுத்த வந்த நிலையில், கர்ப்பிணியை நாய் கடித்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...



சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது. உடன் வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் மரு. பிரகாசம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கமலம், தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் மஞ்சுளா உட்பட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் விவாசாயிகள் உள்ளனர்.

# வங்கி கடன் வாங்கி தருவதாக கூறி மோசடி..

## மாற்றுத்திறனாளி இளைஞர் ஈரோடு எஸ்பி அலுவலகத்தில் புகார் மனு..



ஈரோடு .நவ.01

ஈரோட்டை சேர்ந்த மாற்றுத்திறனாளி இளைஞரிடம் வங்கியில் வங்கிக் கடன் வாங்கி தருவதாக கோரி மோசடி செய்த நபர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, எஸ் பி அலுவலகத்தில் புகார் மனு கொடுத்தார்.

ஈரோடு மாவட்டம், சூரியம்பாளையம் பெருமாள் மலை பகுதி சேர்ந்தவர் சந்திரகுமார் (52)இவர் ஈரோடு எஸ் பி அலுவலகத்தில் புகார் மனு ஒன்றை கொடுத்துள்ளார். அதில் அவர் தெரிவித்துள்ளதாவது.

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஒரு மாற்றுத்திறனாளி. ஈரோடு தாலுகா அலுவலகத்தில் மனு எழுதி கொடுக்கும் வேலை செய்து வருகிறேன். அதில் வரும் வருமானத்தை வைத்து கஷ்டமான சூழ்நிலையில் குடும்பம் நடத்தி வருகிறேன்.

இந்த நிலையில் ஈரோடு மாவட்டம் வெள்ளோடு பகுதி சேர்ந்த குமார் என்பவர் தாலுக்கா அலுவலகத்திற்கு வந்து செல்லும் போது எனக்கு பழக்கம் ஏற்பட்டது. எனது சூழ்நிலையை சொல்லி, உங்களுக்கு மானியத்துடன் கூடிய வங்கி கடன் வாங்கித் தருகிறேன் என்று கூறினார்.

அதற்காக முன் பணமாக 50,000 ரூபாய் என்னிடம் கேட்டார். அதற்கு நான் அவரின் பேச்சை நம்பி அவருக்கு ரூபாய் 50,000 பணத்தை03/04/2025 அன்று ரொக்கமாக அவரின் கையில் கொடுத்தேன்.

இதனைத் தொடர்ந்து அவர் என்னை அழைத்துக் கொண்டு சென்று புதிய சிம்கார்டு வாங்கி அதன் மூலம் வங்கி ஒன்றில் எனது பெயரில் வங்கிக் கணக்கை தொடங்கினார்.

அதன்பின் அந்த வங்கியின் மூலம் வழங்கப்பட்ட வங்கி பாஸ்புக், ஏடிஎம் கார்ட் உள்ளிட்டவற்றை அவரை வைத்துக் கொண்டார்.

இந்த நிலையில் எனக்கு அவர் சொன்னது போல் வங்கி கடனை வாங்கித் தராமல் இழுத்தடித்து வந்தார். இது குறித்து அவரிடம் கேட்டபோது, என்னிடம் தகாத வார்த்தைகளை கூறி தகராறு செய்தார்.

கையை இழந்த மாற்றுத்திறனாளியான என்னால் அவரிடம் போராட முடியவில்லை.

எனவே காவல்துறை சமூகம் அந்த மோசடி நபரிடம் இருந்து என்னுடைய பணத்தையும் மற்றும் ஆவணங்களையும் பெற்றுத் தருமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த மனதில் மாற்றுத்திறனாளி இளைஞர் சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

# சுரண்டைக்கு திட்டங்கள் இல்லை பொதுமக்கள் அதிருப்தி அரசு மருத்துவமனை வேண்டும் என முதல்வரிடம் நேரடியாக பெண்கள் கோரிக்கை



தென்காசி , நவ.1–

சுரண்டைக்கு முதலமைச்சர் எந்த திட்டங்களையும் அறிவிக்காதது அப் பகுதி மக்களிடையே பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது இந்நிலையில் அரசு மருத்துவமனை வேண்டும் என பெண்கள் முதல்வரிடம் நேரடியாக கோரிக்கை வைத்த வீடியோ சமூக வலை தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

தென்காசி மாவட்டத்தில் முடிவுற்ற பல்வேறு பணிகள் மற்றும் புதிய திட்டப்பணிகள், நலத்திட்ட உதவிகள் வழங்க தமிழக முதல்வர் முக ஸ்டாலின் தென்காசிக்கு வருகை தந்தார். ஆலங்குளத்தில் இருந்து சுரண்டை வழியாக அவர் தென்காசி சென்ற போது சுரண்டையின் எல்லை முதல் கடைசி வரை பொதுமக்கள் ரோட்டின் இருபுறமும் கூடி நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர் இதனால் முதலமைச்சர் பல இடங்களில் வாகனத்தை நிறுத்தியும் வாகனத்தில் இருந்து இறங்கியும் வரவேற்பை ஏற்றுக்கொண்டார்

இதில் சிவகுருநாதபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி முன்பு மாணவ, மாணவிகள் முதல்வரை காண காத்திருந்தனர். மாணவர்களை கண்ட முதல்வர் வாகனத்தை விட்டு இறங்கி வந்து பள்ளி மாணவிகளிடம் கலந்துரை யாடினார். மேலும் நன்றாக படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என அறிவுறுத்தி வாழ்த்தினார்.

அப்போது அங்கே வந்த சுரண்டை பகுதியைச் சேர்ந்த பெண்கள் தங்க ரதி, பிரேமா ராணி, அழகு சுந்தரி, பேபி, பாப்பா, சின்னத்தாய் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட பெண்கள் தமிழக முதல்வரிடம் சுரண்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமே உள்ளது. போதிய மருத்துவர் இல்லை. நாங்கள் மருத்துவ சிகிச்சைக்காக தென்காசி செல்ல வேண்டி உள்ளது எனவே சுரண்டையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 50 படுக்கை வசதியுடன் மருத்துவமனையாக தரம் உயர்த்தி தர வேண்டுமென நேரடியாகவே கோரிக்கை வைத்தனர். கண்டிப்பாக நிறைவேற்றி தருவதாக அந்தப் பெண்களிடம் முதல்வர் உறுதி அளித்தார்.அந்த வீடியோ சமூக வலை தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

இந்நிலையில் சுரண்டை பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சுரண்டையில் அரசு பஸ் டெப்போ, சுரண்டையில் அரசு மருத்துவமனை, இரட்டைகுளம் ஊத்துமலை கால்வாய் திட்டம் உள்ளிட்ட திட்டங்களை அறிவிப்பார் என மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தனர் ஆனால் சுரண்டை பகுதிக்கு எந்த திட்டங்களையும் முதலமைச்சர் அறிவிக்க வில்லை ஆகவே சுரண்டை மற்றும் சுற்று வட்டார பகுதி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்

# லட்சக்கணக்கில் கல்லா கட்டும் ஈரோடு மாநகராட்சி பணியாளர்கள்... கையில் கரப்ஷன் பட்டியலை வைத்துக்கொண்டு குற்றம் சாட்டிய மண்டல குழு தலைவர்..

ஈரோடு நவ.01

ஈரோடு மாநகராட்சி மன்ற கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில் முறைகேடான முறையில் மாநகராட்சி ஊழியர்கள் வசூல் வேட்டையில் ஈடுபட்டு வருவதாக மாநகராட்சியின் மண்டல குழு தலைவர் கையில் கரப்ஷன் பட்டியலை வைத்துக் கொண்டு குற்றம் சாட்டியது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



ஈரோடு மாநகராட்சியின் மாதாந்திர சாதாரண மாம் என்ற கூட்டம் நேற்று முன்தினம் காலை மாநகராட்சி கூட்ட அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மேயர் நாகரத்தினம் தலைமை வகித்தார். துணை மேயர் வி. செல்வராஜ், ஆணையாளர் அர்பித் ஜெயின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டம் தொடங்கி நடைபெற்ற நிலையில், மண்டல குழு தலைவர்கள் பிகே பழனிசாமி, காட்டு சுப்பு (என்கின்ற) சுப்பிரமணியன், சசிகுமார், குறிஞ்சி தண்டபாணி ஆகிய நான்கு மண்டலங்களின் தலைவர்களும் மற்றும் பெரும்பாலான மாமன்ற உறுப்பினர்களும் ஈரோடு மாநகராட்சியின் நிர்வாக சீர்கேட்டை கண்டித்து கடும் குற்றசாட்டுகளை முன்வைத்து பேசினார்கள்.

60 வார்டுகளில் நிலவும் கடுமையான குடிநீர் பற்றாக்குறை பிரச்சனைகள் குறித்தும், ஊராட்சி கோட்டை கூட்டு குடிநீர் திட்ட செயல்படுத்தும் பணிகளில் ஏற்பட்டுள்ள குறைகளை சுட்டிக்காட்டியும் குற்றம் சாட்டி பேசினார்கள்.

அதேபோல் மாநகராட்சி பகுதிகளில் உள்ள சுகாதார சீர்கேடுகள் மற்றும் தூய்மை பணியாளர்கள் பற்றாக்குறை, ஜேசிபி மற்றும் குப்பைகள் அல்லும் வாகனங்கள் பற்றாக்குறை மற்றும் பழுதடைந்த நிலையில் இருப்பதையும் சுட்டிக்காட்டி, கடும் குற்ற சாட்டுகளை முன்வைத்து இவர்கள் பேசினார்கள்.

இந்த குற்றச்சாட்டுகளுக்கு அமைதியாக இருந்து மேயர் நாகரத்தினம் மௌனம் காத்தார்.

இதனால் கோபத்தின் உச்சிக்கு சென்ற மண்டலகுழு தலைவர்களும், மாமன்ற உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகளையும் பணியாளர்களையும் கேள்வி கேட்டு தொலைத்து எடுத்தனர்.

இதனால் டென்ஷனான மாநகராட்சி அதிகாரிகளும் அந்த நேரத்தை சமாளிக்க, இனி வரும் நாட்களில் குறைகளை சரி செய்கிறோம் என்று கூறி சூழ்நிலையை சமாளித்தனர்.

இதில் திருப்தி அடையாத அவர்கள் மேலும் கோபத்துடனும் , சட்டத்துடனும் அதிகாரிகளிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக மாநகராட்சி கூட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த அமளி, துமளிக்கு இடையே திமுக முக்கிய நிர்வாகியும், ஈரோடு மாநகராட்சியின் 2வது மண்டல குழு தலைவர் ஆன காட்டு சுப்பு (என்கின்ற) மு. சுப்பிரமணியன் ஒரு பகிர் குற்ற சாட்டை முன்வைத்து பேசினார்.

கையில் ஒரு நீண்ட கரப்ஷன் பட்டியலை கையில் ஏந்தி அவர் பேசியபோது, ஈரோடு மாநகராட்சி பகுதிகளுக்கு உட்பட்ட ஈரோடு பேருந்து நிலையம், கடைவீதிகள் மற்றும் புதியதாக அமைய உள்ள சோலார் மற்றும் கனி ராவுத்தர் குளம் புதிய பேருந்து நிலையப் பகுதிகளில் உள்ள அனைத்து கடைகளிலும், இந்த மாநகராட்சி சேர்ந்த ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் லஞ்ச வசூல் வேட்டையில் ஈடுபட்டு வருவதாக ஆதாரத்துடன் அவர் பேசியபோது மாநகராட்சி கூட்ட அரங்கம் சற்று நேரம் அதிர்ச்சியில் உறைந்து நின்றது.

மண்டல குழு தலைவர் காட்டு சுப்புவின் ஆதாரத்துடன் கூடிய குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்ல முடியாமல் மேயரும் அதிகாரிகளும் திணறித்தான் போயினர்.

ஏற்கனவே அதிக அளவிலான சொத்து வரி, குப்பை வரை உள்ளிட்ட வரி இனங்களால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மாநகராட்சி ஊழியர்களின் இந்த அடாவடி லஞ்ச வசூல் வியாபாரிகள் மத்தியிலும் பெரும் கோபத்தை ஏற்படுத்தி உள்ளது.

சட்டமன்ற பொது தேர்தல் வரை இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் மாநகராட்சி நிர்வாகமும் சரிவர செயல்படவில்லை, ஏற்கனவே குடிநீர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் இருந்து வரும் நிலையில், இது போன்ற அடாவடி வசூல் மற்றும் லஞ்ச வேட்டையால் ஆட்சிக்கும், கட்சிக்கும் தான் கெட்ட பெயரை ஏற்படுத்தும்.

மேலும் இவர்களின் இந்த அடாவடி லஞ்ச வசூல் வேட்டைக்கு சில அதிகாரிகளும் உடந்தை என்பது வெட்கக்கேடானது. மேலும் இந்த வகையில் என் கையில் அதற்கான ஆதாரமாக யார் யார் எங்கெங்கு எவ்வளவு வசூல் வேட்டை நடத்தி வருகிறார்கள் என்பதற்கான ஆதாரம் இந்த நிமிடம் என்னுடைய கையில் உள்ளது.

மாநகராட்சியில் உள்ள எத்தனையோ பிரச்சனைகளுக்கு செவி சாய்க்காமல் உள்ள மாநகராட்சி நிர்வாகம் இது போன்ற தவறான செயலுக்கும், செவி சாய்க்காமல் கண்டு கொள்ளாமல் இருந்து வருவது வேதனை அளிக்கிறது, எங்களைப் போன்ற மண்டலக் குழு தலைவர்களுக்கும், மாமன்ற உறுப்பினர்களுக்கும் தலைகுனிவை ஏற்படுத்துவதாக உள்ளது. என்று 2வது மண்டல குழு தலைவர் குற்றம் சாட்டி பேசினார்.

இவரின் குற்றச்சாட்டுகள் குறித்து நேற்று நாம் விசாரித்த போது,, அது உண்மை என்று தெரிகிறது. ஈரோடு மாநகராட்சி நிர்வாகம் என்ன செய்யப் போகிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.



சேலம் மாநகராட்சி மூக்கனேரியில் ரூ.23 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் புனரமைப்பு மற்றும் அழகுப்படுத்துதல் பணியினை மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ தமிழ்நாடு துணை முதலமைச்சரின் கூடுதல் செயலாளர் டாக்டர் ஆர்த்தி, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார், உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# அரசு பள்ளிகளின் கல்வித்தரம், கட்டமைப்புகளை தனியாருக்கு இணையாக மேம்படுத்த வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்!

சென்னை: நவ.1–

அரசு பள்ளிகளின் கல்வித்தரம், கட்டமைப்புகளை தனியாருக்கு இணையாக மேம்படுத்த வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்; தமிழக அரசு ஒவ்வொரு ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் ஒன்று, இரண்டு என மாதிரி பள்ளிகளை உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளாக உருவாக்கியது. இந்த திட்டத்தை கொண்டு தமிழகம் முழுவதும் அரசு மாதிரி பள்ளிகளில் கல்வி தரத்தை உயர்த்த கட்டுமானத்தை தனியார் பள்ளிகளுக்கு நிகராகவும், போதிய இருக்கை வசதி மற்றும் அனைத்து வசதிகளை கொண்டும், போதிய ஆசிரியர்கள் மற்றும் அனைத்து கட்டமைப்பு களுடனும் தனியார் பள்ளிக்கு நிகராக உருவாக்கப் பட்டு சில ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது.



தனியார் பள்ளிகளுக்கு இணையாக மாதிரி பள்ளிகளை உருவாக்கி அந்தப் பள்ளிகளின் பத்தாம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு தேர்ச்சி விகிதத்தையும், மதிப்பெண்ணையும் உயர்த்தியது வரவேற்கக்கூடியது. அந்த மாதிரி பள்ளிகள் ஒரு ஒன்றியத்திற்கு ஒன்று, இரண்டு தான் தற்போது வரை உள்ளன. அந்த மாதிரி பள்ளிகளை தொடர்ந்து அனைத்து அரசு பள்ளிகளும் அதே கட்டமைப்புகளுடனும், கல்வி தரத்துடனும், போதிய ஆசிரியர்களுடனும் செயல்பட வேண்டும். அப்படி இருந்தால் தான் தனியார் பள்ளிகளுக்கு இணையாக அரசு பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க ஆர்வம் வரும். அரசு பள்ளிகள் மீதும் மதிப்பு கூடும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார் உட்பட பலர் உள்ளனர்.

# திருவள்ளூர் அருகே 4 வயது குழந்தையை மிரட்டி, பாலியல் பலாத்காரம் செய்தவருக்கு, 23 ஆண்டுகள் சிறை தண்டனை ரூ. 21 அபராதம் விதித்து போக்சோ நீதிமன்றம் தீர்ப்பு :

திருவள்ளூர் நவ 01 :

திருவள்ளூர் அடுத்த கடம்பத்தூர் ஒன்றியம், நயப்பாக்கம் கிராமத்தை சேர்ந்தவர் தானேஷ் என்கிற யுவராஜ் (29). இவர் 2018 ம் ஆண்டு ஜனவரி 18ஆம் தேதி அதே பகுதியில் சாலையில் விளையாடிக் கொண்டிருந்த 4 வயது குழந்தையை அருகிலிருந்த உறவினர் வீட்டு மாடிக்கு தூக்கிச் சென்று மிரட்டி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இதுகுறித்து, குழந்தையின் தாயார் திருவள்ளூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.



போலீசார் வழக்கு பதிவு செய்து தானேஷ் என்கிற யுவராஜை கைது செய்து திருவள்ளூர் கோர்ட்டில் ஆஜர் படுத்தி புழல் சிறையில் அடைத்தனர்.இந்த வழக்கு விசாரணை திருவள்ளூர் மாவட்ட போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. அரசு தரப்பில் வழக்கறிஞர் விஜயலட்சுமி ஆஜராகி வாதாடினார்.

வழக்கின் இறுதி விசாரணை நடத்திய நீதிபதி உமாமகேஸ்வரி, குற்றவாளிக்கு தீர்ப்பளித்தார். இந்த தீர்ப்பில் பாலியல் குற்றத்திற்காக 5 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ. 5 ஆயிரம் அபராதமும், குழந்தையை கடத்திய குற்றத்திற்காக 10 ஆண்டுகள் சிறைண்டனையும், ரூ. 10 ஆயிரம் அபராதமும், வீட்டில் அடைத்து வைத்து பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்திற்காக 1 ஆண்டு சிறை தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும், குழந்தையை அடித்து மானபங்கம் செய்த குற்றத்திற்காக 7 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ. 5 ஆயிரம் அபராதமும் என மொத்தம் 23 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ. 21 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

மேலும் குழந்தைக்கு தமிழக அரசு ரூ. 3 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் நீதிபதி தீர்ப்பில் தெரிவித்தார். இந்நிலையில் குற்றவாளி தானேஷ் என்கிற யுவராஜ் ஸ்ரீபெரும்புதூரில் நடந்த வழிப்பறி வழக்கில் கைது செய்யப்பட்டு காஞ்சிபுரம் கிளை சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதனால் திருவள்ளூர் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் நீதிமன்ற உத்தரவை காஞ்சிபுரம் கிளை சிறை அதிகாரிகளிடம் வழங்க உள்ளனர்.

# தமிழ்நாட்டில் ஏழு ஐஏஎஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு..!!

சென்னை: தமிழ்நாட்டில் ஏழு ஐஏஎஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

1.மனித உரிமைகள் ஆணையத்தின் செயலாளராக கண்ணன் ஐ.ஏ.எஸ். பணியிட மாற்றம்.

2.கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் அம்ரித், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குனராக மாற்றம்

3.சென்னை ஆறுகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை உறுப்பினர் செயலராக லீலா அலெக்ஸ் நியமனம் செய்யப்பட்டார்.

4.பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணைய இணை மேலாண்மை இயக்குநராக கவிதா ஐ.ஏ.எஸ். நியமனம்.

5.கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளராக மு.வீரப்பன் நியமனம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு.

6.உயர்கல்வித் துறை துணைச் செயலாளராக ரேவதியை நியமனம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு.

7.தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை இயக்குநராக சி.முத்துக்குமரன் நியமனம்

# தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு தீத்தடுப்பு விழிப்புணர்வு...!



வந்தவாசி, நவ 01:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த சி.ம.புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தெள்ளார் தீயணைப்பு நிலைய அலுவலர் ரமேஷ் தலைமையில் தீவிபத்தை தடுக்கும் வழிமுறைகள் மற்றும் இடி, மின்னல் அசம்பாவிதங்களை எதிர்கொள்ளும் விளக்கங்கள் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்டது. மேலும் மாணவர்களுக்கு ஆறு, ஏரி, குட்டை ஆகியவற்றில் தனியாக சென்று குளிக்க கூடாது என்று வலியுறுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் டி. ஆர்.நம்பெருமாள், உதவி ஆசிரியை பாரதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# வழிகேட்பது போல் நடித்து பெண்ணிடம் 2 பவுன் தங்க செயின் பறிப்பு

கோவை மாவட்டம் சூலூர் அருகே உள்ள அருகம்பாளையத்தை சேர்ந்த அன்னபூரணி என்பவர் சாலையோரம் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த அடையாளம் தெரியாத 2 நபர்கள், அன்னபுரணி அருகே சென்று சோமனூர் செல்வதற்காக வழிகேட்டுள்ளனர். அன்னபூரணி வழி சொல்லிக் கொண்டிருக்கும்போது, இருசக்கர வாகனத்தில் பின்புறம் அமர்ந்திருந்த நபர் சட்டென அன்னபூரணியின் கழுத்தில் இருந்த 2 பவுன் தங்க செயினை பிடித்து இழுத்தார். இதனால் அன்னபூரணி கூச்சலிட்ட நிலையில், செயினை பறித்துக் கொண்டு இருவரும் மின்னல் வேகத்தில் அங்கிருந்து தப்பிச் சென்றனர். இந்த சம்பவம் தொடர்பாக அன்னபூரணி அளித்த புகாரின் அடிப்படையில் சூலூர் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதற்கிடையில், செயின் பறிப்பு தொடர்பான சிசிடிவி. காட்சி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.",

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421